அ.வ எண் 68/2013 சொருபராணி(வாசா1) தேதி:31.01.2024

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

இந்த வழக்கின் பதிவு எண் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி அனுபவத்தில் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள உயிலில் 1ம் பிரதிவாதிக்கு எந்த சொத்தும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி மனைவிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளார் என்று வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன். தாவா சொத்தை 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருவதால் பாகப்பிரிவினை வழக்கு நிலைநிற்கத்தகுத்தல்ல என்றால் சரியல்ல. எனது அம்மா இறக்கும் பொழுது சுமார் 67 அல்லது 68 வயது இருக்கும். எனது அம்மா எப்படி கையெழுத்து போடுவார்கள் என்றால் புஷ்பகாந்தி அம்மாள் என்றும், புஷ்பகாந்தியம்மாள் என்றும் இருவகையாக கையெழுத்திடுவார். என்னிடம் காட்டப்படும் வாசாஆ.4 உயில் ஆவணத்தில் புஷ்பகாந்தியம்மாள் என்று கையெழுத்திடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணம் எனது தாயார் புஷ்பகாந்தியம்மாள் எழுதிவைத்த மற்றொரு உயில் ஆவணம் என்று சொன்னால் சரிதான். ஆனால் மேற்படி உயிலுக்கும் இந்த தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. மேற்படி ஆவணம் பிசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் பிசாஆ.1 உயில் ஆவணத்தில் புஷ்பகாந்திஅம்மாள் மற்றம் புஷ்பகாந்தியம்மாள் என்று அடுத்தடுத்த பக்கங்களில் மாறி மாறி கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். எனது தாயாருக்கு 47 வயதில் புற்றுநோய் வந்தது. எனது தாயாருக்கு அடையார் புற்றுநோய் சிகிச்சை மையத்தில் சிகிச்சை எடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அடையார் புற்றுநோய் சிகிச்சை மையத்திலிருந்து வ ருடாவருடம் எனது அம்மாவின் உடல்நிலை குறித்து கடிதம் வரும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கடிதம் எனது அம்மாவிற்கு அனுபப்பட்ட கடிதம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் பிசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது அப்பா, அம்மா எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் பிசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் திருமண பத்திரிக்கை எனது பெற்றோர்களின் திருமணப்பத்திரிக்கை என்று

சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் பிசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வாசாஆ.4 உயில் ஆவணத்தில் எனது அம்மாவின் முகவரி தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, பழைய போஸ்ட் ஆபீஸ் தெரு கதவு எண்.73 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.4 உயில் ஆவணத்தில் எனது அம்மாவின் உடல்நிலை குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் எனது அம்மா அப்பொழுது உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். உயில் எழுதுவதற்கு முன்னரும் பின்னரும் 1ம் பிரதிவாதிக்கு தகவல் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. மேற்படி தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, பழைய போஸ்ட் ஆபீஸ் தெரு கதவு எண்.73 ல் 1ம் பிரதிவாதி தனது குடும்பத்தோடு வசித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். எனது அம்மாவை 1ம் பிரதிவாதி தான் பராமரித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது மூத்த சகோதரி கலைசெல்வம் தான் பராமரித்து வந்தார். வாசாஆ.4 உயிலில் எனது அம்மாவை எனது மூத்த சகோதரி பராமரித்து வருவதாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வாசாஆ.4 உயிலில் எனது அம்மாவிற்கு 1 முகவரி மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அம்மா உயில் எழுதப்போவதாக கோவில்பட்டியில் யாரிடமாவது சொன்னாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாசாஆ.4 உயிலில் சாட்சி கையெழுத்து போட்டதாக உள்ள கருப்பையா மற்றும் பிசாஆ.1 உயிலில் உள்ள சாட்சி கையெழுத்து கருப்பையா ஆகியோர்கள் ஒரே நபர் என்று சொன்னால் சரிதான். மேற்படி உயில்களில் சாட்சி கையெத்து போட்ட கருப்பையா மற்றும் தங்கம் ஆகிய நபர்கள் எங்களுக்கு உறவினர்கள் கிடையாது. அவர்களை எனக்கு யார் என்றே தெரியாது. மேற்படி சாட்சிகளின் அங்கஅடையாளங்கள் எனக்கு தெரியாது. உயில் எழுதும் பொழுது சொத்தின் அசல் ஆவணங்களை எனது அம்மா எடுத்து வந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உயில் எழுதுவதை நான் நேரடியாக பார்க்கவில்லை. எனது மதுரையில் வைத்து என்னிடம் உயில் எழுதியதாக மதுரையில் சொன்னார். உயில் எழுதி எத்தனை நாட்கள் கழித்து எனது அம்மா என்னிடம் உயிலை பற்றி சொன்னார் என்றால் உடனடியாக சொன்னார். ஆனால் எத்தனை நாட்கள் என்று எனக்கு நியாபகம் இல்லை. உயிலை எழுதிய நபரை எனக்கு தெரியாது, எனது அம்மாவிற்கு தான் தெரியும். உயிலில் சாட்சி கையெழுத்து போட்ட நபர்களை எனது அம்மாவிற்கு தெரியும். மேற்படி சாட்சிகள்

எனது அம்மாவிற்கு உறவினர்கள் கிடையாது. என்னிடம் காட்டப்படும் வாசாஆ.2 கிரைய ஆவணம் எனது அம்மா பெயரில் உள்ள கிரைய ஆவணம் என்று சொன்னால் சரிதான். எனது அம்மா இல்லத்தரசியாக இருந்தார் என்றால் எனது அப்பா கடை வைத்திருந்தார் மேற்படி கடையை எனது அப்பாவோடு சேர்த்து பார்த்துக்கொண்டார். எனது அம்மா தனியாக வியாபாரம் எதுவும் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். ஒரே கடையை தான் அப்பா, அம்மா பார்த்துக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் வாசாஆ.2 கிரைய ஆவணத்தில் ஏற்கனவே உள்ள அடமானத்தை செலுத்தி கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வாசாஆ.2 ஆவணத்தில் எனது அம்மா கிரையத் தொகை கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றும், எனவே எனது அப்பா எனது அம்மா பெயரில் பெயரளவிற்கு வாசாஆ.2 கிரைய ஆவணம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனவே, வாசாஆ.2 ஆவணம் பெயரளவிலான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ.4 உயில் ஆவணத்தில் ஜமீன் சர்வே எண்.384 மற்றும் 385 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.4 உயில் ஆவணத்தில் புதிய சர்வே எண் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எனது அம்மா பெயருக்கு யூடிஆர் காலகட்டத்திலேயே தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பட்டாவின் அடிப்படையில் தான் எனது பெயரில் கூட்டு பட்டா பெற்றேன் என்றால் சரிதான். புதிய சர்வே எண்.302/3 என்று எப்படி தெரியும் என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தகவல் பெற்றேன். வாசாஆ.4 உயிலானது எனது அம்மாவால் எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கோவில்பட்டியில் சார்பதிவாளர் அலுவலகம் இருக்கும் பொழுது எனது அம்மா மதுரைக்கு சென்று உயிலை பதிவு செய்தார் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மா இறந்த பிறகு அவரது நகைகளை நாங்கள் பிரித்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. நான் ஒரு நகைகூட வாங்கவில்லை. இந்த வழக்கில் எனது மூத்த சகோதரி சொர்ண விஜயா என்பரை கட்சி சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். அவர் சொத்து வேண்டாம் என்று சொன்னார் அதனால் கட்சி சேர்க்கவில்லை. மேற்படி சொர்ணவிஜயா 10.03.2008 ல் இறந்துவிட்டார் என்றால் தேதி நியாபகம் இல்லை ஆனால் இறந்துவிட்டார். எனது சகோதரி கலைச்செல்வம் 22.12.2010 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பாகப்பிரிவினை

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எனது சகோதரியின் வாரிசுகளுக்கு நான் சட்ட அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சட்ட அறிவிப்பு 1 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு மட்டுமே அனுப்பினேன் என்றால் சரியல்ல. மற்ற பிரதிவாதிகளுக்கும் அனுப்பியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் வாசாஆ.5 சட்ட அறிவிப்பு 1 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே, வேறு பிரதிவாதிகளுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். வாசாஆ.8 பட்டாவிற்கு முந்தைய பட்டா பாஸ்புக் பற்றி எனக்கு தெரியாது. 1996ம் வருடமே எனது அம்மா பட்டா பாஸ்புக் பெற்றுள்ளார் என்றும், எனவே 2000 வருடத்தில் வாசாஆ.4 உயிலை பழைய ஜமீன் சர்வே எண் கொடுத்து எழுதியதாக பொய்யாக வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R. ரத்தினவேல் பாண்டியன்
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.